## சர்க்கரைத்துறை

## மக்கள் சாசனம்

இம்மாநிலத்தில் கரும்பு வளர்ச்சியில் மேம்பாடு காணவும், பொதுவாக சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகளையும், குறிப்பாக கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை ஒழுங்குபடுத்தும் குறிக்கோளுடனும் சர்க்கரைத்துறை 1969ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் என்ற முறையில் சர்க்கரைத்துறை ஆணையர் அவர்கள் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சி, கரும்பு விநியோகத்தை முறைப்படுத்துதல் மற்றும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பணிகளைக் கண்காணிக்கிறார். மேலும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிர்வாக இயக்குநர் என்ற முறையில் அவற்றை நிர்வாகிக்கின்றார். சர்க்கரைத் துறை ஆணையர் அவர்கள் கரும்பு ஆணையராகவும், உத்தியோக ரீதியாக பதவி வகிப்பதால், கரும்பு கட்டுப்பாடு ஆணை, 1966 மற்றும் தமிழ் நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம், 1949 ஆகியவற்றில் உள்ளவற்றை அமலாக்கம் செய்கிறார்.

**சர்க்ரைத்துறையின் செயல்பாடுகள் :**

1 மாநிலத்திலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் இட நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் பேரில் அரசாங்க உத்தரவின்படி கரும்பு பரப்பு ஒதுக்கீடு செய்தல்.

2 கரும்பு பயிரிடுவோருக்கு நியாயமான கரும்பு விலையை அரசிற்குப் பரிந்துரைசெய்தல்.

3 புதிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்தல் மற்றும் கரும்பு பரப்பினை நிர்ணயம் செய்தல்.

4 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பணிகளைக் கண்காணித்தல்.

5 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளை நிர்வகித்தல்

6 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு கண்டு தொழில் அமைதியை நிலை நாட்டுதல்.

7 கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஒதுக்கப்படும் தொகையில் புதிய சாலைகள் அமைத்தல், இணைப்பு சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகளை சீரமைத்தல்.

8 கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் குறித்த காலத்தில் கரும்பு விலையினை பட்டுவாடா செய்வதை உறுதி செய்தல்.

9 ஆலைகளிலேயே கரும்புமாதிரிப் பண்ணைகள் அமைத்து நவீன உற்பத்தித் திறன் பற்றியவைகளை செயல்முறை மூலம் விளக்குதல்.

10 கரும்பு பிரிவு அலுவலகங்களில் பணியாற்றும் விரிவாக்க அலுவலர்கள் கரும்பு வயல்களுக்கு முறையாகச் சென்று சீரான உறவினை கரும்பு விவசாயிகளிடம் வளர்த்தல்.

11 இணைய தளம் மூலம் ஆலையின் கரும்புத் துறையின் வெளிப்படையான செயல்பாட்டை கண்காணித்தல்.

12 கரும்பு விளைச்சலில் விவசாயிகளுக்கு நவீன தொழில் முறைகளை கையாளுதல் பற்றியவைகளைக் கிராமக் கூட்டங்கள் மூலமாகவும், செயல்முறைகள் மூலமாகவும், கலந்துரையாடல் மூலமாகவும் எடுத்துரைத்தல்.

13 நவீன விவசாய யுக்திகள் மூலமாக அதாவது சரியான வழியில் விவசாய தொழில் நுணுக்கங்களைக் கையாளுதல் மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறை மற்றும் நிலத்தடி சொட்டு நீர்ப்பாசனத்துடன் கூடிய சொட்டு நீர் வழி உரமிடுதல் போன்ற வழிமுறைகளைப் பின்பற்றுதல்.

14 சர்க்கரை ஆலைகளின் எத்தனால் உற்பத்தி, இணை மின் திட்டம், திசு வளர்ப்பு மற்றம் இயற்கை உரம் தயாரித்தலுடன் கூடிய நமது மாநிலத்தில் உருவாக்கப்பட உள்ள சர்க்கரை வளாக திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

15 சர்க்கரை ஆலைகளினால் ஏற்படும் மாசு படர்தலைக் குறைக்க வழி காணுதல்.

**கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்**

சம்பந்தப்பட்ட கூட்டுறவு ஆலைகளின் துணை விதிகளின் படி, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் முதன்மை நிர்வாகிகளுக்குக் கரும்பு பயிரிடுவோரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மாநிலத்தின் கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

சர்க்கரை ஆலைகள் கீழ்க்காணும் நிலைகளில் விவசாய அங்கத்தினர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளன.

1) கரும்பு பதிவு செய்தல்
2) கரும்பு பயிரிடுவதில் விவசாயிகளுக்கு ஆலோசனை அளித்தல்
3) விதை, உரம் மற்றம் பூச்சிக்கொல்லிகள் போன்ற இடுபொருட்கள் வழங்குதல்
4) நிதியுதவி / பயிர் கடன்அளித்தல்
5) முன்னுரிமை அடிப்படையில் கரும்பு வெட்டு உத்தரவு வழங்குதல்
6) அங்கத்தினர்களால் அளிக்கப்பட்ட கரும்புக்கு பணப் பட்டுவாடா செய்தல்
7) வேளாண் பணிகளை இயந்திரமயமாக்குதல்
8) கரும்பு பிரிவு பணியாளர்களுக்கு உள்பணிப் பயிற்சி நடத்துதல்
9) கரும்பு பயிர் சாகுபடியில் உள்ள அதிநவீன தொழில் நுட்பங்களை அறியவும் பயிற்சி பெறவும் அருகிலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்பு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் கரும்பு விவசாயிகளைக் கல்வி சுற்றுலா அனுப்புதல்.

**ஆலையிலுள்ள கரும்புத் துறையின் பொறுப்புகள் :**

| வ. எண். | நடவடிக்கை | தொடர்பு கொள்ள வேண்டிய இடம் | தொடர்பு கொள்ள வேண்டிய நபர் | கால அவகாசம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கரும்பு பதிவு | பிரிவு அலுவலகம் | கரும்பு உதவியாளர் / கரும்பு அலுவலர் | 10 நாட்கள் |
| 2 | இடு பொருள்கள் விநியோகம் | பிரிவு அலுவலகம் | கரும்பு அலுவலர் | 7 நாட்கள் |
| 3 | கரும்பு வெட்டு உத்தரவு | பிரிவு அலுவலகம் | கரும்பு அலுவலர் | கரும்பு நடவு செய்யப்பட்ட நாள் / முன்னுரிமைப் பட்டியல் அடிப்படையில் |
| 4 | கரும்பு விவசாயிகளுக்கு விநியோகித்தல் (டன் ஒன்றுக்கு 1/2 கிலோ) | பிரிவு அலுவலகம் | கரும்பு அலுவலர் | விவசாயிகளின் தேவைக்கேற்ப |
| 5 | கரும்பு பணம் கொடுத்தல் | பிரிவு அலுவலகம் | ஆலையின் கணக்குப் பிரிவு / கணக்கு அலுவலர் | 14 நாட்கள் |

**சட்ட ரீதியான பங்கு :**

சர்க்கரைத்துறை ஆணையர் / கரும்பு ஆணையர் கீழ்க்காணும் சட்டம் / விதிகளிலுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவார்.

i) கரும்பு (கட்டுப்பாடு) ஆணை 1966 மற்றும் கரும்பு (கட்டுப்பாடு) (திருத்திய) ஆணை 2006,

ii) தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் 1949

iii) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும்

iv) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 1988